


யாழ் - புத்தூர்

# அமரர் காசிநாதர் கந்தையா அவர்கள்

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் - கல்வித் திணைக்களம்)

சிவபதம் அடைந்தமையைக் குறிக்கும்

# நினைவு மலர்

**20.09.2001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரத்தேர் ஏறி வரும் குமரா.....!

சங்கிலியன் ஆண்டு வந்த செந்தமிழர் பூமியிலே
கோவில் கொண்டு வீற்றிருக்கும் முருகா - நாம்
நாடிழந்து நாதியற்று நடுத் தெருவில் நிற்கையிலும்
நற்றுணையாய் வந்திடுவாய் குமரா!

(சங்கிலியன்......

நல்லை நகர் வீதியிலே வெள்ளை மணல் மீதினிலே
சித்திரத் தேர் ஏறி வரும் முருகா - எம்
இன்னல்களைக் கண்ட பின்னும் இமை திறக்க மாட்டாயா
இந்திரனின் குலங் காத்த குமரா!

(சங்கிலியன்......

செல்வந்தக் குமரனென்றும் பணக்காரக் கந்தனென்றும்
பேர் கொண்டு சீர் பெற்ற முருகா - நாம்
ஷெல் வந்து வீழ்ந்ததனால் வீடிழந்து சீர்குலைந்து
வாழ்வதை நீ கண்டிலையோ குமரா!

(சங்கிலியன்......

முந்தை வினை தீர்த்தருளும் கந்தமுருகேசன் உன்னை
சிந்தையில் வைத்தே தொழுதேன் அருள்வாய் - உன்
பொன் முகத்தின் புன்சிரிப்பால் இன்னருளை ஈந்தெமது
துன்பமெல்லாம் போக்கிடுவாய் குமரா!

(சங்கிலியன்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# காசிநாதர் கந்தையா



*மலர்வு*
*15. 06. 1931*

*உதிர்வு*
*21. 08. 2001*

*திதி — வளர்பிறை திருதியை*
*ஆவணி 5ம் திகதி (21.8.2001) செவ்வாய்க்கிழமை*

"நெருதல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

- வள்ளுவம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப்பாமாலை

## திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரம் ஆர் புத்திரர் ஆர்தாம் தாம் தாம் ஆரோ
வந்தவாறு எங்ஙனே போமாறு ஏதோ
மாயமாம் இதற்கு ஏதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கு ஒன்று சொல்லக் கேள்மின்
திகழ் மதியும் வாழ் அரவம் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்று எழுவார்க்கு இருவிசும்பில் இருக்கல் ஆயே

### திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

### திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீஉலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத்தொழுது அருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லைவளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய்மண்ட பத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

### திருமந்திரம்

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந்தாரே.

### திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

### திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற் குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே

### வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்னை கொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்

தொல்லையிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவர் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பணியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யா தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் தணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனே ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என்ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னே யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பாவே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த

## உடற்கூற்று வண்ணம்

ஒரு மடமாதும் ஒருவனுமாகி
இன்பசுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறுசுரோணிதம் மீது கலந்து

பனியில்ஓர் பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்து புகுந்து திரண்டு
பதுமம் அரும்பு கமடம் இதென்று
பார்வை மெய்வாய் செவிகால் கைகள் என்ற

உருவமுமாகி உயிர்வளம் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம் அகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து

மகளிர்கள் சேனை தரவணையாடை
மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓரறிவீரறி வாகிவளர்ந்து

ஒளிநகைஊறல் இதழ்மட வாரும்
உவந்துமுகந்திட வந்து தவழ்ந்து
மடியில் இருந்து மழலை பொழிந்து
வாஇருபோவென நாமம் விளம்ப

உடைமணியாடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடு உண்டு
தெருவில் இருந்து புழுதி அளைந்து
தேடியபாலரொ டோடி நடந்து
அஞ்சுவதாகி விளையாடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தருஞான குருஉபதேசம்
முத்தமிழின் கலையும் கரைகண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து

மயிர்முடிகோதி அறுபதநீல
வண்டியர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கும் பணிகள் அணிந்து
மாக்தர்போகதர் கூடிவணங்க

மதனசொரூபன் இவன்என மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிளிகொண்டு சுழிய எறிந்து
மாமயில்போல் அவர்போவது கண்டு

மனது பொறாமல் அவர் பிறகோடி
மங்கல செங்கல சந்திகள் கொங்கை
மருவமயங்கி இதழ் அமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி

ஒரு முதலாகி முதுபொருளாய்
இருந்த தனங்களும் வம்பில் இழந்து
மதனசுகந்த விதனம் இதன்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து

வளமையும்மாறி இளமையும்மாறி
வண்பல்விழுந்து இருகண்கள் இருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோதம் அடைந்து
செங்கையினில் ஓர்தடியும் ஆகியே

வருவது போவது ஒருமுதுகூனும்
மந்தியெனும் படிகுந்தி நடந்து
மதியம் அழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமல் மொழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயில்வரும் நேரம் இருமல்பொறாது
தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து வறண்டு
துகிலும் இழந்து சுணையும் அழிந்து
தோகையர் பாலகர் கோரணிகண்டு

கலியுகமீதில் இவர்மரியாதை
கண்டிடும் என்பவர் சஞ்சலம் மிஞ்ச
கலகல என்று மலசலம் வந்து
கால்வழிமேல்வழி சார நடந்து

தெளிவும் இராமல் உரை தடுமாறி
சிந்தையும் நெஞ்சமும் உலைந்து மருண்டு
திடமும் உலைந்து மிகவும் அலைந்து
தேறிநல் ஆதரவு ஏதைன நொந்து

மறையவன் வேதன் எழுதியவாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனி என கண்டம் இனியென தொந்த
மேதினி வாழ்வு நிலாதனி நின்ற

கடன்முறை பேசும் என உரை நாவு
உறங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே

வளர்பிறைபோல எயிறும் உரோம
முஞ்சடையும் சிறு குஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவம் இலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து

வலைகொடுவீசி உயிர் கொடுபோக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் காலம் அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையவர் காணும் எனுமயலாளர்
பஞ்சு பறந்திட நின்றவர்பந்த
ரிடுமென வந்து பறையிடமுந்த
வேபிணம் வேக விசாரியும் என்று

பலரையும் ஏவி முதியவர் தாமி
ருந்த சவம் கழுவும் சிலரென்று
பணிதுகில் தொங்கல் களபமணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை

வரிசை கெடாமல் எடுமென ஓடி
வந்திளமைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென நொந்து

விறகிடமூடி அழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்க
ளுருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும் அடியேனை இனி ஆளுமே.

நிறைவு பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தடிகள் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேனினி?

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாளளவும்
அந்திபகலாய்ச் சிவனை யாதரித்து- தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழன்மூட்டு வேன்?

வட்டிலிமுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உரிசியுள்ள்
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே! எனவழைத்த வாய்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் காசிநாதர் கந்தையா

## அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழநாட்டின் வடபாலமைத்து எண்சாண் உடம்பிற்கு சிறந்திடும் சென்னியாய் இலங்கு புகழ்மிகு யாழ்ப்பாணப் பகுதியில் புத்தூர் என்னும் கிராமத்தில் உயர் சைவ வேளாண் மரபினரான காசிநாதர் - கனகாம்பிகை தம்பதியர் இனிதே இல்லறம் நடத்தி வருங்கால் அவர்தம் ஏகமகனாய் 15.06.31 இல் கந்தையா அவர்கள் அவதரித்தார். இவருடன் உடன் பிறந்தவர் வேதாய சவுந்தரி ( இரசாத்தி ) ஆவார்.

தனது முதலாவது ஆண்டில் தந்தையை இழந்த கந்தையா அவர்கள், அன்னையின் அரவணைப்பில் பல சிரமங்கள் மத்தியிலும், சீரிய பண்பாளனாய், ''அக்கா, தம்பி'' என்ற பாசப்பிணைப்புடன், பொறுப்புணர்வுடன் வளர்ந்து வந்தார். ''பகவக் கீதையை'' எடுத்துரைத்த அன்னையார் மூலம் தமிழ் அறிவைப் பெற்றார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியில் முடித்து, பின்னர் யாழ் / இந்துக் கல்லூரியிலும் சாவகச்சேரி / இந்துக்கல்லூரியிலும் பயின்றார்.

முதன் முதலாக யாழ் / ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் ஆசிரிய பணியை மேற் கொண்டு பின்னர் காணி, நீர்பாசன திணைக்களத்திலும், இறுதியில், கல்வித் திணைக்களத்திலும் தொழில் புரிந்து உயர் பதவிகளையும் பெற்றார்.

1964ஆம் ஆண்டு சைவமும் தமிழும் தழைத்தோங்கி செளிப்புடன் விளங்கிய கோப்பாய் எனும் ஊர் வாழ்ந்த (Proctor J.P.,முன்னாள் கிராமச் சங்கத் தலைவராக இருந்த சுப்பிரமணியம் யோகாம்பிகை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியான யோகதேவியைக் கரம்பிடித்தார்.

இவர்களது இல்லற வாழ்வின் நல்லறத்தின் பயனாய், 1965, 1967, 1970 ஆம் ஆண்டுகளின் முறையே காவேரி, கௌசல்யா, சுரபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் மூன்று புத்திரிகளையும் 1973, 1976 ஆம் ஆண்டுகளில் முறையே காண்டீபன், மாதவன் என்னும் இரு மகன்களையும் கிடைக்கப் பெற்றனர்.

காவேரி, சிவரூபன் என்பவரை திருமணஞ் செய்து, ஜனன் என்னும் புத்திரனைப் பெற்று வாழ்கின்றார். கௌசல்யா குருபரன் என்பவரைத் திருமணஞ் செய்து ஷெரிக்கா, கேஷனா என்னும் இரு புத்திரிகளைப் பெற்று வாழ்கின்றார். சுரபி, றாம் மனோகர் என்பவரைத் திருமணம் செய்து ஜஷ்மிதா என்னும் மகளைப் பெற்று வாழ்கின்றார். சிரேஷ்ட புத்திரன் காண்டீபன், சிவப்பிரியா அவர்களைத் திருமணம் செய்து வாழ்கிறார். கனிஷ்ட புத்திரன் மாதவன் கற்கை நெறியில் ஈடுபாடு செலுத்தி வாழ்கிறார்.

ஆண்டவன் அளித்த ஆற்றலை அருமையாகப் பயன்படுத்தி, ஆட்கள் அனைவருக்கும் மனமகிழ்ச்சியுடன் சேவையில் ஈடுபட்டு திருப்தி அடைந்தார்.

ஏழு சகாப்தங்களின் ஈற்றில், காலனின் நட்பை நாடினார். ஆவணி (21.08.2001) அதிகாலை இறைவனடி எய்தினார்.

'விதி எதிர்ப்படைப்பலம் இல்லையே! ஐயகோ! ஜமன், தனது விறைப்பான கரங்களை அவர்பால் வைத்தானே!''

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

ஐயா, என் ஆருயிரே!
ஆண்டுகள் பலவாய் நாம்
அன்பால் பிணைந்திருந்தோம்
சீர் மிகு செல்வங்கள்
ஈன்று சிறந்திருந்தோம்
சான்ற நற் துணையாய் இல்
வாழ்வினில் இணைந்திருந்து
நேர்வழி காட்டிய நீர்
என்றிங்கு சென்றீரோ?

சாரதி இல்லாதோர்
வாகனம் போல் எம்மைச்
சஞ்சலமடைய விட்டுச்
சடுதியில் சென்றதேனோ?

ஆறாத்துயர் கொண்டு
அரற்றித் தவிக்கின்றோம்
மீளாத் துயிலில் நீர்
மூழ்கத் துணிந்தீரோ?

நினைவில் உமையிருத்தி
நித்தம் வாழ்வோம் நாம்
கனவில் வந்தேனும் -எம்
கண்ணீர் துடைத்திடுவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் காவேரி புலம்பல்

மூத்தவள் நானென்று
முதுகிலே ஏற்றி வைத்து
செல்லமாய்க் கொஞ்சி என்னைச்
சிரித்து மகிழ வைத்து
அன்பினைச் சொரிந்த என்றன்
ஆசை அப்பா -எமை
அழுது புலம்ப விட்டு
அகன்று தான் சென்றீர்களோ?
எங்கள் நல்வாழ்வுக்காய்
உங்கள் உடல் வருத்தி
ஏணியாய் இருந்தீர்கள்!
ஏறினோம் பல படிகள்!
பாரினில் நாம் சிறந்த
பேருடன் வாழ்வதற்காய்
பற்பல தியாகங்கள்
பரிவுடன் செய்தீர்கள்! இன்று
ஊருக்கெல்லாம் உயிர்
காத்திடும் மருந்தளித்தும்
உங்களின் கரம்பிடித்து
ஊசிதான் போட்டேனா?
பாவியாய் ஆனேன் நான்
பரிதவித்தழுகின்றேன்!
ஆறுதல் கூறுதற்கு
யாருமே இல்லை அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் இதயத்தில் என்றும் நிறைந்திருக்கும் என் அப்பாவுக்கு வணக்கம்!**

**உங்கள் அன்பு மகள் எழுதுவது,**

அப்பா!
அப்பா! அப்பா! அப்பா!

அப்பா உங்களை நான் இழந்தாலும் உங்கள் உறவுகள்
என்றைக்கும் எந்த ஜென்மத்திலும் என்னுடன் தொடரும் அப்பா!
''தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'' என்பதற்கு ஈடாக என்னை
நல்வழி காட்டி வளர்த்தீர்கள் அப்பா!
இனி அப்பா என்று யாரை நான் கூப்பிடுவது அப்பா?
அன், பண்பு, பாசம் என்பதற்கு வரைவிலக்கணமாய்
என்னிடத்தில் இருந்தீர்கள் அப்பா!
இதற்கு ஈடாக யாராலும் முடியாது அப்பா!
எவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் கஷ்டம் தெரியாது
எமையெல்லாம் வளர்த்தீர்கள் அப்பா!
அப்பா! அப்பா! அப்பா!

சில சமயங்கள் நாம் வீட்டிற்கு late ஆகவந்தால் - எம்மை
காணவில்லை என்ற ஏக்கத்தில் துடியாய் துடிப்பீர்களே அப்பா!
ஆனால் இன்று எம்மையெல்லாம் கதறக் கதற விட்டுவிட்டுப்
போக எப்படியப்பா உங்களால் முடிந்தது அப்பா!
அப்பா! அப்பா! அப்பா!

அப்பா என் வாழ்வில் நீங்கள் எனக்கு செய்தவற்றிற்கு
நன்றி அப்பா! நன்றி
உங்கள் ஆத்மா சாந்தியடைய நாளும் பொழுதும்
எல்லா வல்ல அந்த இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.
அப்பா! அப்பா! அப்பா!

என்றும் உங்களை மறவா
அன்பு மகள்
**Hema (Kaushu)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் சுரபி புலம்பல்

கடைசி மகள் நானென்று
கடும் பாசம் கொண்டிருந்தீர்
கனவு பல கண்டவற்றை
நனவாக்கிச் சென்று விட்டீர்களே!

கல்விதனைக் கற்பதற்காய்
'கம்பஸ்' நான் சென்ற போது
காணாதிருந்ததனால்
கலங்கி மனம் நொந்தீர்களே!

கப்பல் வரும் நாளெல்லாம்
கவனமாகக் காத்திருந்து - உங்கள்
கடிதம் தனைக் கண்டதும் தான்
களிப்பும் நான் கற்றிடுவேன்!

ஒன்றாக ஒரு வீட்டில்
கடைக் காலம் இருந்தாலும்
நன்றாக நாம் பேசி
மகிழ நோயும் விடவில்லை

என்றாலும் என் அப்பா,
எம் அன்பு அறிவீர்களே!
எந்நாளும் உம் ஆத்ம
சாந்திக்காய் இறைஞ்சுகின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் காண்டீபன் புலம்பல்

கல்வியில் கரை காணக்
கடுமையாய் உழைக்கச் செய்தீர்களே!
ஊக்கமதை யெமக்கு
என்றுமே அளித்து வந்தீர்கள் அப்பா!

பொறுப்புள்ள தலைமகனாய்
தந்தைக்கு வலக்கரமாய்
இல்லத்தின் சுமை தாங்கும்
இதயத்தைக் கொண்டவனாய்
என் இளங்காலம் முதல்
வளர்ந்திட வழிகாட்டி
அங்ஙனம் நானாளாய்
நல்லிடம் சேர்ந்ததனால்
தந்தை மகற்காற்றும்
உதவியதாம் அவையத்து
முந்தி இருக்கச் செயலென்ற
வள்ளுவன் வாய் மொழியை
வலிதுடைத் தாக்கி விட்டீர்கள் அப்பா!

எந்தையே! ஈற்றிலுங்கள்
அருகினிலிருந்து ஈமக்
கிரியைகள் செய்யும் கடன்
கழித்திடக் கூடவில்லை!
என் மனக் குமுறலை நீர்
ஏற்றங்கமைதி கொள்வீர்கள்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் மாதவன் புலம்பல்

கடைக்குட்டி நான் என்று
கண்போலக் காத்து வந்து
உயர்வான கல்வி பெற
உன்னத நெறி காட்டி
அன்புடன் அரவணைத்து
பண்புடன் கண்டித்து
பாசத்தைப் பொழிந்த அப்பா
எங்கின்று சென்றீர்கள்?

என்னைத் தூக்கிச்
சீராட்டிப் பாராட்டி
வளர்த்த உங்களை
நானும் அதுபோன்றே
பராமரிக்க வைத்ததனால்
நோய் வடிவில் இறைவன்
பாசத்தைப் பகிர வைத்தானோ?

அப்பா! நீங்கள் எனக்குத்
தந்தையாயும் இருந்து
குழந்தையாயும் இருந்தீர்களே!
என்றும் உங்கள் நினைவுகள் என்
நெஞ்சில் நிலைபெற்றுக்
கணமும் கண்ணீர்
உதிர்த்தபடி வாழ்கின்றேன்!
உங்கள் ஆத்மா சுவர்க்கம் ஏகிடற்கு
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்பின் அம்மப்பாவுக்கு

வணக்கம்!

எத்தனை தடவைகள் உங்களை நான்
சந்தித்திருப்பேன் - ஆனால்
இனிமேல் உங்களை சந்திக்கவே முடியாது
என நினைக்க அழுகைதான் வருகிறது அம்மப்பா!
எனினும், உங்கள் நினைவுகள் என் உள்ளத்தை
விட்டு நகராது அம்மப்பா!
என் உள்ளத்தில் நீங்கள் என்றும் நிறைந்திருக்கிறீர்கள்
அம்மப்பா!

நாம் அனைவரும் Leka பெரியம்மாவுடன் U.S.A.இல்
எவ்வளவு சந்தோஷமாய் இருந்தம் அம்மப்பா - ஆனால்
எம் Holiday முடிவில் எல்லோரும் கண்ணீர்கடலில் தான்
அம்மப்பா!
என் வாழ்வில் உங்களை எப்படி மறக்க முடியும் அம்மப்பா!

அம்மப்பா! அம்மப்பா! அம்மப்பா!
நீங்கள் சுகம்வலமாய் இருக்கும் போது நான் உவ்விடம்
வந்தால் உங்களை காணும் போதெல்லாம் உங்கள் பெயரை
வைத்து எவ்வளவு குறும்புப் பாட்டுக்களை பாடுவேன்
அம்மப்பா!
அப்போது உங்கட்கு கோபமே வந்ததில்லை - பாடி முடிய
சிரிப்பீர்களே அம்மப்பா! இன்றும் இது என் நினைவில்
நிற்கின்றது.

என் குறும்புகட்கு என் அம்மா உங்களை கேட்பா
''அப்பா இதுக்கு அடிக்கட்டா என்று'' கதைக்க இயலாத
நீங்க வேண்டாம் என்று சைகை காட்டுவீர்களே அம்மப்பா!
இதை நினைக்க இன்னும் எனக்கு அழுகை தான் வருகிறது
அம்மப்பா!
நீங்கள் கடவுளிடம் தான் சென்றிருக்கிறீர்கள் அம்மப்பா!
உங்களை நினைத்து நான் அந்த கடவுளை பிரார்த்திக்கிறேன்

என்றும் உங்கள் அன்பை மறவா
**Sherika Kuruparan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dear Ammappah!

Where have you gone, Ammapph!

I hope you have gone to the God!

I Love you somuch Ammappah

I miss you a lot Ammappah!

I feel so sad Ammappah!

I will pray the God for you Ammappah

Your Ever loving
grand daughter
***Keshana Kuruparan***

**Derest Ammappah;**

Hello Hello

Ammapa! Ammapa!

Aho! A.ha!

I Love you

You love me

We are a happy family

okey okey

Bye Bye

**Loving Grandson**

**Jannan Mylupilai Sivarupan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மப்பா, அம்மப்பா
பிட்டுத் தீர்த்தினேன்!
பால் பருக்கினேன்,
Pills, Mixture எல்லாம்
பக்குவமாய்த் தந்தேன்,
தீப்பந்தம் பிடித்தேன்.
ஏன், எங்கு என்னை
விட்டுப் போனீர்கள்?

Your Ever loving
grand daughter
ஜஷ்மிதா ராம் மனோகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கந்தையா அண்ணை

" A good heart is better than
a good mind"

இந்த ஆங்கிலப் பொன் மொழிக்கு எடுத்துக் காட்டாக இருந்தவர் அமரர் கந்தையா அண்ணை அவர்கள்.

உள்ளத் தூய்மையும் உதவும் உணர்வும், இரக்க சிந்தையும் கொண்டவர். அவர் தனது இதயக் கோட்பாடுகளுக்கு மாறாகத் தான் நடந்ததில்லையென்றும், ஆனால் சில சந்தர்ப்பங்களில் விபரீத சிந்தனைகள் தன்னை குழப்பியதும் உண்டு என்றும் அவர் கூறுவார். ஆகவே தான் இந்தப் பொன் மொழியை முகவுரையாக வைத்து, இச் செய்தியினை வழங்குகின்றேன்.

கல்வி இலாகாவில் தொடர்ந்து பல ஆண்டுகள் 'பொதுஜனத் தொடர்பு உத்தியோகத்தராக இருந்து பல கல்வி அதிகாரிகளின் நன்மதிப்புக்கும், பாராட்டுதல்களுக்கும் ஆளாகியிருக்கிறார். இந்தப் பதவி அவருக்கு மிகவும் பொருத்தமாகவும் வசதியாகவும் அமைந்து விட்டதெனலாம். யாழ்ப்பாணக் கல்வி அலுவலகம் அவரின் ''பாசறை'' என்றாலும் அது மிகையாகாது. ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அவரிடத்து நம்பிக்கையும், மதிப்பும் வைத்துப் பழகி வந்துள்ளார்கள். நகரப்புறப் பாடசாலைகளில் கிராமப்புற மாணவர்களுக்கு அனுமதி பெற்றுதவும் கைங்கரியம் தொட்டு ஆசிரியர்களின் இடமாற்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதுவரை, எதுவித பாரபட்சமின்றியும் சாதி இனப்பாகுபாடு காட்டாது நிறைவேற்றியுள்ளார்கள்.

புத்தூரைப் பிறப்பிடமாகவும், அவ்விடத்து ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவருமானவராகவும் தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் திரு.வீ.ஆனந்த சங்கரி அவர்களினதும் இன்னும் முன்னாள் பாராளுமன்ற நிகழ்வுச் செய்தித் தொகுப்பாளர் அமரர் திரு.நே.புஸ்பரத்தினம் அவர்களினதும் பாடசாலைச் சகாவாகவும் நண்பராகவும் இருந்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் நீண்டகாலக் களங்கமற்ற அரச சேவையைக் கௌரவப்படுத்தும் வகையில், அண்மையில் கொழும்பு மாவட்டத்தின் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

இவர் ஒரு சிறந்த குடுப்பத்தலைவனாகவும் பாசமிகு தந்தையாகவும் இருந்திருக்கிறார், இவரின் பிள்ளைகள் யாபேரும் நற்பதவிகளில் நன்மதிப்போடும் இலங்கையிலும், வெளிநாட்டிலும் வாழ்ந்து வருகிறார்கள். இறுதிக் காலத்தில், குறிப்பாகச் சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு மேல் படுக்கை நோயாளியாக இருந்த போது, இவரின் கனிஷ்ட மகன் இவருக்கு ஆற்றிய உதவிகளையும் தியாகத்தையும் ஒவ்வொரு இளவல்களும் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும். அன்னாரின் மனைவியின் தொண்டுகளும் பாராட்டப்பட வேண்டியதே.

அமரரின் ஆத்மா சாந்தி பெற இவரின் குல தெய்வமான புத்தூர் காரைக் கூடல் வைரவர் அருள் பாலிப்பாராக.

சுபம்

கொழும்பு 06
10.9.2001

**சதா.லோகேஸ்வரன்**
முன்னாள் புத்தூர் கிராமோதய
சபைத்தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Service to Humanity

Late Kasinathar Kandiah was born to be of service to humanity. My association with him commenced after my entry to the Public service during the latter part of fifties. As a senior officer, Kandiah was a guide and mentor to his juniors. Unresitatingly he rendered advice and guidance to all these who approached him for over four decades.

By his sheer hard work, devoting to duty and commitment, he earned the fame and respect of his superiors. In consequence of his meritorious service with distinction, he gained promotions and rose up to the position of Administration officer. In his last days, he ably managed two difficult areas mainly Mullaitivu and Kilinochchi where he worked considerably during period of turmoil and tribulation under very trying conditions until his retirement. He was a very good Public servant, one of a calibre how hard to find.

After retirement, he was engaged in social and welfare service. In recognition of his services, the government had made him an all Island Justice of the Peace in order to serve well. The most striking feature of Kandiah's personality was his charm and simplicity. Power and position never took control of the genial human being.

Kandiah was outspoken, kind hearted and helpful to the needy. He departed leaving his affectionate wife, and five loving children who are holding eminent position in Srilanka and abroaed. This bears testimony for the self less and devoted services he rendered to humanity.

My deepest sympathies to the bereaved family.
May his soul rest in peace.
Ohm Santhi! Shanthi! Shanthi!

**V.Ponnambalam**
Ex-Secretary
To the state Minister for Education
President, St.Jhon's College OBA
Colombo.

BP.2/6, Mangala road
Manning Town,
Colombo -8
Srilanka
TP:699009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் காசிநாதர் கந்தையா

திரு காசினாதர் கந்தையா காலமான செய்தியை அவரது மகன் மாதவன் தொலைபேசியில் 22.08.01 காலை கொடுத்த போது மிகவும் கவலைப்பட்டேன். எவரின் மரணத்தையும் எவராலும் தடுக்க முடியாது என்பது உண்மை.

திரு கந்தையா அவர்களை 1965ம் ஆண்டு என் மூன்றாவது அக்காவை அவர் திருமணம் செய்து கொண்டதால் உறவினராக்கிக் கொண்டேன். நான் இரத்தினபுரியில் றண்வல எனுமிடத்தில் கடமை புரிந்த போது லீவு எடுப்பதில் மிகக் கஷ்டப்பட்டேன். அப்படியிருந்தும் அக்காவின் திருமணத்திற்கு வந்து சேர்ந்தேன்.

1967ம் ஆண்டு எனக்கு புத்தூரில் விவாகம் செய்து வைத்த என் பிதாவுக்கு மிகவும் நல்ல ஆலோசகராகவும் செயற்பட்டிந்தார் என் அத்தான் கந்தையா.

20 வருடங்களாக பிறிவிடுதல் செய்யாமல் இருந்த என் அம்மாவின் காணிகளை என் அண்ணன் ஒருவரின் மறைவின் பின் சில வருடங்கள் கழித்து பங்கிட பிதா ஆலோசனை செய்ய என் சகோதரங்களும் அத்தான்மாரும் எனக்கு அப்படியொரு பொறுப்பை என் மேல் போட்டார்கள். கந்தையா அத்தான் எனக்கு வழிகாட்டியாக இருந்து நல்ல முறையில் செயல்பட வைத்தார்.

அவர் கடவுள் நம்பிக்கையும் பக்தியும் கொண்டு வாழ்ந்தவர். அவரின் அரச சேவைக்காலத்தில் பலன் பெற்று மேம்பட்டவர்கள் பலர். அவர் தன் கடமையை தன் குடும்பத்துக்கு குறையில்லாது நிறைவேற்றி உள்ளார்.

அமரர் திரு கந்தையா அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொள்ளக் கூடியதாக இருந்தது எனக்கும் மனத்திருப்தியை அளிக்கின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

**டாக்டர். சந்திரசேகரா**
(கோப்பாய்)
தெகிவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Farewell - Dear Kandiah Annan

I have heard of Annan as an officer of par excellent Public Relationship, while he was in service both in Colombo and Kandy at the Education Department -yet my relationship started at Vavuniya while he was at the Education Department and self as principal - Cheddikullam M.M.V. at the Department he was everything, the most sort out officer by the teachers. Teachers far from Mullaitivu and other distant places come to the Department to pour out their problems or grievances and one could see the eagerness of annan to hear them all. Although he may not be in a position to assist them in the fullest measure yet shares in the lives of others by sharing a few words of genuine inquiry and placing it forth to the relevant officials and participating with their personal problems.

Teacher transfer is a problem that confronts every Boss at the department and I know for certain the late Mr.M.Simiampillai Chief Education officer of Vavuniya & Mullaitivu seeks his assistance and advice in sorting out the difficulties that may tend to arise.

My contact became closer still while he was Administrative officer at Kilinochchi & self a tutor at the newly formed faculty of Agriculture. As the days work comes to an end and evening sets in, devoid of entertainment and fun, I cycle up to the Education Department to meet Annan. He is there as usual will his fellow officers and the minor staff surrounding him to share a joke and enjoy his wit and sense of humour which he very much possessed.

Personally he has helped me - my pension paper were getting dilly - dallied and he put his foot forward and gave me the necessary assistance and eased me out of the difficulty. I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

also cannot forget the hospitality and goodness extended to me by him - his loving wife and everloving children at his residence at Thimbiragasaya whenever I called on them.

As a father -he was devoted to his family and evinced lot of interest and care over his children and met their requirements to the maximum and in return the children responded splendidly & magnificently and have adorned both the medical and Engineering professions.

His latter period was rather sorrowful -he was constrained to his bed for afew years which he endured so patiently and with resignation Gods ways are not our ways- that we cannot but bow down. to Gods will.

May the Loving and dear Departed Soul seek solace and Eternal Happiness in that beautiful shore when one day, Sooner or later all be called to share.

70, Kirulapona Avenue
colombo

**A.I.Lazarus Gunanayagam**
Emiritus Principal and
Tutor - Sri lanka Technical College
Colombo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V. ANANDASANGAREE, M.P.**
Member of Parliament
Jaffna Districe
Sri Lanka
Tel : 552372 / 347721
Fax : 384904

30/1B, Alwis Place,
Colombo - 03
Sri Lanka

12.09.2001

It is with deep sorrow that I write these few words of appreciation about my very good and life long friend the late Mr.Kasinathar Kandiah whom I always addressed as Kandiapillai, for till I left school where we studied together, he was known as Kandiapillai. For many of his friends this may be news. The fact that he hailed from an aristocratic family in Puttur is also little known to the outside world.

I met Mr.Kandiapillai at Sri Somaskanda College in Puttur when I joined that College in January, 1946 as a boy of 13 years. He was my senior by one year. My father the late Mr.S.Veerasingham who was the Principal of that College then had a lot of regards for the people of Puttur, most of whom according to his thinking were good Philanthropists. He came to this conclusion by his close association with the leading citizens of Puttur or due to the Philanthropic activities of the late Mr.Malavarayar Kandiah I do not know. But the fact remains that free education was made available only at Puttur Sri Somaskanda College founded by this Philanthropist the late Mr.Malavaryar Kandiah, who even without obtaining grant from the Government left behind properties in the name of the College, income from which was sufficient to pay the staff of the College. Somaskanda College Puttur was perhaps the only College, that gave free education at that time. It was much later that the late Mr.C.W.W. Kannangara made education free



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in all schools in Sri Lanka. The vernacular schools never charged a fee from the students.

The late Mr.Kandiah worked with the Education Department right through out. He is very well known and also very popular in the Education circle. The Teachers loved him because of the services rendered by him to the Teaching community. He was always ready to help any body who needed his services.

Mr.Kandia's demise is a great loss not to his wife and children but also to a large number of his friends and relations as well. While consoling his grieving wife, children and relations I console myself on being satisfied that he had done his best for his children all of whom are placed well in life and also that he had served the society well and not left any of his ambitions unfulfilled.

May his soul rest in Peace.

**V.Anandasangaree**
M.P.for Jaffna District.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தூர் காசிநாதர் கந்தையா சமாதான நீதவான்

ஈழமணித் திருநாட்டில் சிகரமாய் விளங்கும் யாழ்ப்பாண நகரில் ஆன்மிக மணம் கமழும் ஆலயங்களும் அறிவொளி பரப்பும் கல்விக் கூடங்கள் நிறைந்த புத்தூரில் அரச குடும்பத்தில் ஏக புத்திராக அவதரித்தார் காசிநாதர் கந்தையா உயர் கல்வியை முடித்த கையோடு அரச சேவையில் கல்வி திணைக்களத்தில் சேர்ந்து பின் உயர் கல்வி பரிபாலன அதிகாரியானார். உயர்ந்த மக்கள் சேவையை திறம்பட செய்து புத்தூர் கந்தையா என்ற பெயரை தனதாக்கிக் கொண்டார்.

அரச குடும்பத்தைச் சேர்ந்த அப்புகாத்து கோப்பாய் சந்தி சுப்பிரமணியத்தின் மூன்றாவது புதல்வி பிரபல ஆசிரியை யோகாதேவியை திருமணம் செய்தமை அவர் வாழ்வை மேலும் வலுப்படுத்தியது. இது அவருக்கு பொருத்தமான வாழ்க்கையை அமைத்து புத்தூர் கந்தையா ஆடாத ஆட்டம் என்ன? என்று கேட்கும் அளவுக்கு அவர் வாழ்க்கை அமைந்தது. உலகில் வேண்டிய பலதையும் அனுபவிக்க கூடியளவுக்கு வாழ்ந்தார் - சுற்றத்தாரையும் ஊராருக்கும் உலகிற்கும் உதவி செய்து அரசியல் சமூகசேவையில் உயர்ந்து உயர் சமாதான நீதவானும் ஆனார்.

உறவினர்களாகிய பிரபலமான Hon பாலசிங்கம் இந்துபோட் இராசரத்தினம் புத்தூர் நடராசா ஆகியோரின் உதவியுடன் செய்யக்கூடிய அத்தனையையும் பொது மக்களுக்கு செய்தார்.

அவரும் மனைவியும் பிள்ளைகள் படிப்பில் கவனம் செலுத்தி உயர் கல்விவரை படிப்பித்தது மட்டுமல்லாமல் இரு மகள்மார்கள் சர்வகலாசாலை சென்று டாக்டர்களாகவும் இரு மகன்மார்கள் என்ஜினியர்களாகவும் பட்டம் பெற்றார்கள்.

மருமகன் - மருமகள்மார்கள் சேர்ந்து மூன்று டாக்டர்கள், இரண்டு என்ஜினியர்கள் பட்டதாரிகளை தனது குடும்பம் ஆக்கிக் கொண்டார். மற்றவர் பெருமை படக் கூடியளவு குடும்பத்தை உச்சக்கட்டத்தில் வைத்தார். "ஊரார் பிள்ளையை ஊட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்'' என்ற முதுமொழிக்கு அமைய குடும்பமே உயர்ந்தது.

எவரும் நினைக்க முடியாத உயர் நிலையை அடையும் போது பாரிசவாத நோயினால் பீடிக்கப்பட்டு திடீரென்று குழந்தையானார், அவரின் மனைவியும் பிள்ளைகளும் அவரை பிள்ளை போல் பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மனம் தளராது சென்ற ஐந்து வருட காலமாக சீராகப் பார்த்தனர். குறிப்பாக அவரது இளைய மகன் மாதவன் தந்தையை தனது என்ஜினியர் படிப்பையும் தொடர்ந்து இரவும் பகலும் சிறப்பாகக் கவனித்தார். இதை நான் பலமுறை கண்டு வியப்படைந்தேன்.

உறவினர்களாகிய எங்கள் குடும்பத்தையும் தங்கள் குடும்பத்தையும் கல்யாணக் காலம் தொட்டு இன்று வரை எல்லோரையும் உபசரித்து ஒன்றாக்கிக் கொண்டனர். எனது மருமகன்மாரின் சிறிய தந்தையாகிய இவர் எனது இளையமகள் - மருமகன் திருமணத்துக்கு புத்தளத்துக்கு முழுக் குடும்பமாக அனைவரும் வந்து தகப்பன் கடமையாகிய தெத்தம் செய்து கொடுத்தமையே இவரின் இறுதி கடமையாக அமைந்து விட்டது.

அவர் செய்த நற்பணிகளைத் தொடர்ந்து செய்வதே நாம் அவருக்கு செய்யும் கைமாறு. கந்தையா காசிநாதர் காலடி சேர்ந்தார். அவர் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போமாக.

சாந்தி, சாந்தி, சாந்தி

பொன்பரப்பி
**செ.வேலாயுதபிள்ளை**
புத்தளம்
பாம்குறோஸ், பதிவாளர் வளவு
சுழிபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை சோ. சேனாதிராசா, பா. உ.

30/1ஏ, அல்விஸ் பிளேஸ்
கொழும்பு
12-09-2001

திரு.காசிநாதர் கந்தையா அவர்கள் மறைந்து விட்டார் என்ற செய்தி அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல எமக்கும் ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தி விட்டது.

யாழ்ப்பாணம் புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.கந்தையா அவர்கள் இளம் வயதிலிருந்தே கல்வியில் சிறந்தவராய், கல்வித்துறையில் நேர்மையான கடின உழைப்பாளராய் இருந்து வந்துள்ளமையை அறிந்திருந்தேன். இதே பாரம்பரியத்தில் வளர்ந்த அவரது பிள்ளைகளும் கல்வியில் உயர்ந்து, சிறந்து விளங்குவதைக் காணமுடியும்.

திரு.கந்தையா அவர்கள் அரசுக் கல்வித்துறையில் கல்வி நிர்வாகியாகப் பதவி வகித்து நற்பெயர் பெற்றிருந்தார்.

திரு.கந்தையா அவர்களுடன் மனையாள் அவரது பிள்ளைகளுடன் ''ஹவ்லொக் ரவுன்'' வீட்டுத் தொகுதியொன்றில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக ஒன்றாக வாழ்ந்து, பழக முடிந்தமை பசுமையாக இருக்கிறது. அன்பும், பண்பும், அடுத்தவர் துன்பத்தில் பங்கு கொள்ளும் பக்குவமும் நிறைந்த குடும்பம் என்பது மனநிறைவைத் தருகின்றது.


திரு. கந்தையா அவர்கள் தன் பிற்காலத்தில் நோய்வாய்ப் பட்டிருந்தாலும், தன் குடும்பத்தில் தன் பிள்ளைகளை முன்னேற்றுவதில் அவரின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு நல்ல பலனை அளித்துள்ளமை அன்னாருக்கு அமைதியை, சாந்தியை ஏற்படுத்தியிருக்கும் என்று நம்புகிறேன்.

அன்னார் ஆத்ம சாந்திக்காக நாம் எல்லோரும் பிரார்த்திப் போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாவழி

- செல்லப்பா + காவிரிப்பிள்ளை
  - பிறைசூடி
  - மாணிக்கவாசகர்
  - கனகாம்பிகை + காசிநாதர்
    - வேதநாயகசவுந்தரி + ஜனகன்
    - **கந்தையா** + யோகாதேவி
  - செல்வரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவில்கின்றோம் நன்றிகள் பல



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து 21.08.2001ம் அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவன் அமரர் காசிநாதர் கந்தையா (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் கல்வி திணைக்களம்) அவர்களின் அமரத்துவச் செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், ஈமச் சடங்கிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலித்தவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் இரங்கல் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளைச் சிறப்புற நடத்திய அந்தணப் பெரியோர்களுக்கும், அவற்றில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஆகிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைப் பணிவன்பாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org